**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 124/2026**

**Dated: 27.05.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.அலெக்ஸ்சாண்டர்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1-வது எதிரி ஆஜர். 2-வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1- dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்ட குற்ற ஆவண காப்பகத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் பெரம்பலூர் மது விலக்கு பிரிவில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 03.03.2026-ம் தேதி பெரம்பலூர் மது விலக்கு அமுலாக்க பிரிவு குற்ற எண்.27/2026 வழக்கின் எதிரி ராஜ்குமார், சிவகாசி என்பவர் CDRஐ தணிக்கை செய்து எதிரி ராஜ்குமார் அடிக்கடி டிரைவராக ஒரிசா சென்று வரும்போது ஒரிசாவை சேர்ந்த யாட்லா துர்காராவ் என்பவரை தொடர்பு கொண்டும் அவரிடம் கஞ்சா வாங்கி வருவதும் தெரிய வந்ததன் காரணமாக பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவுப்படி மேற்படி

யாட்லா துர்காராவ்வை விசாரணை செய்து வர வெளி மாநில கடவுசீட்டை பொறுத்து விசாரணை செய்து வருமாறு என்னுடன் உதவி ஆய்வாளர் திரு.மணிகண்டன் காவல் அதிகாரி முனிஸ்ராஜா, மணிகண்டன், பார்கவன் ஆகியோருடன் 04.03.2026 அன்று இரவு கிளம்பி 05.03.2026 அன்று இரவு மேற்படி ஆந்திரா மாநிலம் இச்சாப்பூர் மற்றும் ஒரிசா மாநிலம் கிரிசோலா ஆகிய இடங்களுக்கு சென்று மேற்படி யாட்லா துர்காராவை பற்றி விசாரிக்க அவர் தற்சமயம் வெளியூர் சென்றியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் மேல் அதிகாரியின் உத்தரவு பெற்று திரும்பி வரும்போது 06.03.2026 அன்று இரவு 10.00 மணியளவில் 1-வது எதிரி ராஜ்குமார் மற்றும் 2-வது எதிரி யாட்லா துர்காராவின் செல்போன் எண்களின் டவர் லோக்கேசன் போட்டு பார்த்தபோது கும்முடிபூண்டியில் காண்பித்தது. அங்கு வந்து இருவர்களையும் தேடிய போது அவர்கள் இல்லாததால் 07.03.2026-ம் தேதி காலை 06.00 மணிக்கு பெரம்பலூர் வந்து விட்டோம். பின்பு அன்று காலை 8.00 மணியளவில் எனக்கு கிடைத்த தகவலின்படி மேற்படி ராஜ்குமார் மற்றும் யாட்லா துர்காராவ் இருவரும் போக்கு லாரி மூலம் கஞ்சாவை சிவகாசி கொண்டு செல்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் ஆய்வாளர் அவரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் காவல் ஆய்வாளர் மது விலக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் அனுமதி பெற்று காலை 9.30 மணியளவில் பெரம்பலூர் மாவட்ட எல்லையான திருமாந்துரை வெள்ளாற்று பாலம் அருகே வாகன தணிக்கை செய்தபோது அவ்வழியாக வந்த ஒரு லாரியிலிருந்து இரண்டு நபர்கள் ஒரு நபர் தனது கையில் அடர்பச்சை பையில் வெள்ளை நிற கோடு போட்ட பையில் இன்னொரு நபர் மஞ்சள் வெள்ளை கலந்த கட்டை பையும் எடுத்து கொண்டு வெள்ளாற்றன் கரையிலுள்ள மண்பாதை வழியாக செல்வதை பார்த்த

காவல் ஆய்வாளர் மற்றும் நாங்கள் அவர்களை தடுத்து நிறுத்தி பிடித்து விசாரிக்க அதில் ஒருவர் தனது பெயர் ராஜ்குமார் என்றும் சிவகாசியை சேர்ந்தவர் என்றும் மற்றொரு நபர் தனது பெயர் யாட்லாக் துர்க்காராவ் என்றும் தான் ஒரிசா மாநிலம் கிரிசோலாவை சேர்ந்தவர் என்று தெலுங்கு மொழியில் கூறினார். மேற்படி காவல் ஆய்வாளருக்கு தெலுங்கு மொழி தெரியும் என்பதால் அவர் கூறியதை அவர் புரிந்து கொண்டார். பின்பு அவ்விருவர்களையும் எங்களுடன் வந்த காவலர்களை வைத்து சோதனையிட அவர்கள் உடம்பில் எவ்வித தடயமும் இல்லை. பின்னர் அவர் வைத்திருந்த பையை சோதனையிட அதில் அடர்பச்சை வெள்ளை நிற கோடு போட்ட கையிலும், வெள்ளை மஞ்சள் கலந்த கட்டைபையிலும் 6 பொட்டலங்கள் இருந்தது. அவற்றை பிரித்து ஒரு சாக்கில் கொட்டி காவல் ஆய்வாளர் கொண்டு வந்த உபகரணங்கள் மூலம் அதில் சிறிதளவு எடுத்து நெருப்பு வைத்து பார்க்க அவற்றில் கஞ்சா வாடை அடித்தது. பின்பு நாங்கள் கொண்டு சென்ற எடை போடும் மிஷன் மூலம் எடை போட்டு பார்க்க அதில் மொத்தம் 12 கிலோ கஞ்சா இருந்தது. பின்பு காவல் ஆய்வாளர் மேற்படி கைதிகள் இருவருக்கும் சோதனை சம்மத கடிதம் மற்றும் கைது அறிவிப்பு கடிதம் கொடுத்து கைது செய்து அவர்களது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து பின்பு அவ்வழியாக வந்த திருமாந்துரையை சேர்ந்த இரண்டு நபர்கள் முன்னிலையில் இருவரிடமும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் பெற்று வழக்கு சொத்தை கைப்பற்றினார். பின்னர் அவ்இருவரையும் மாலை 16.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து மேற்படி எதிரிகள் மீது பெரம்பலூர் மது விலக்கு அமலாக்க குற்ற எண்.28/2026 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act-ன்படி காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக உடன் இருந்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை ஆய்வாளர் 07.03.2026-ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொன்னேன் அவர் வாக்குமூலமாக பதிவு கொண்டார். நான் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஆவணங்களிலும் கையொப்பம் செய்யவில்லை. நான் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஆவணங்களையும் நான் தயார் செய்யவில்லை. நானோ என் உடன் வந்த சாட்சிகளோ எந்த ஆவணங்களிலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் வந்ததாக சொல்லப்படும் லாரி எண் லாரியின் பெயர் ஆகியவை எனது முதல் விசாரணை ஆய்வாளர் விசாரணை ஆகியவற்றில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். லாரியின் டிரைவர், கிளினர் ஆகியோர்களை சாட்சியாக போடவில்லை என்றால் சரிதான். அவர்கள் பெயர், விலாசம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடமிருந்து அவர்களின் பணமோ, கைபேசி மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சொல்லும் தேதியில் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளிடமிருந்து எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிகள் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் எனது பெயரோ எனது உடன் வந்த காவலகளின் பெயர்கள் இல்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட இடத்தில் இருந்திருந்தால் எங்களது பெயர் ஆவணங்களில் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நானோ எனது உடன் வந்த காவலர்களோ குறிப்பிட்டு என்ன வேலை செய்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை

என்றால் சரிதான். நான் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 124/2026**

**Dated: 27.05.2026**

**Deposition of Witnesses for PW - 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.முனிஸ்ராஜா** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tmt.Deepika,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**1-வது எதிரி ஆஜர். 2-வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பெரம்பலூர் மாவட்டம் மங்களமேடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு மங்களமேடு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வந்தபோது காவல் கண்காணிப்பாளின் உத்தரவின்படி அயல்பணியாக பெரம்பலூர் மது விலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தபோது கடந்த 03.03.2026-ம் தேதி பெரம்பலூர் மது விலக்கு அமுலாக்க பிரிவு குற்ற எண்.27/2026 வழக்கின் எதிரி ராஜ்குமார், சிவகாசி என்பவர் CDRஐ தணிக்கை செய்து எதிரி ராஜ்குமார் அடிக்கடி டிரைவராக ஒரிசா சென்று வரும்போது ஒரிசாவை சேர்ந்த யாட்லா துர்காராவ் என்பவரை தொடர்பு கொண்டும் அவரிடம் கஞ்சா வாங்கி வருவதும் தெரிய வந்ததன்

காரணமாக பெரம்பலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவுப்படி மேற்படி யாட்லா துர்காராவ்வை விசாரணை செய்து வர வெளி மாநில கடவுசீட்டை பொறுத்து விசாரணை செய்து வருமாறு என்னுடன் ஆய்வாளர் திரு.அலெக்ஸ் காவல் அதிகாரி மணிகண்டன், பார்கவன் ஆகியோருடன் 04.03.2026 அன்று இரவு கிளம்பி 05.03.2026 அன்று இரவு மேற்படி ஆந்திரா மாநிலம் இச்சாப்பூர் மற்றும் ஒரிசா மாநிலம் கிரிசோலா ஆகிய இடங்களுக்கு சென்று மேற்படி யாட்லா துர்காராவை பற்றி விசாரிக்க அவர் தற்சமயம் வெளியூர் சென்றியிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் மேல் அதிகாரியின் உத்தரவு பெற்று திரும்பி வரும்போது 06.03.2026 அன்று இரவு 10.00 மணியளவில் 1-வது எதிரி ராஜ்குமார் மற்றும் 2-வது எதிரி யாட்லா துர்காராவின் செல்போன் எண்களின் டவர் லோக்கேசன் போட்டு பார்த்தபோது கும்முடிபூண்டியில் காண்பித்தது. அங்கு வந்து இருவர்களையும் தேடிய போது அவர்கள் இல்லாததால் 07.03.2026-ம் தேதி காலை 06.00 மணிக்கு பெரம்பலூர் வந்து விட்டோம். பின்பு அன்று காலை 8.00 மணியளவில் எனக்கு கிடைத்த தகவலின்படி மேற்படி ராஜ்குமார் மற்றும் யாட்லா துர்காராவ் இருவரும் போக்கு லாரி மூலம் கஞ்சாவை சிவகாசி கொண்டு செல்வதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் காவல் ஆய்வாளர் அவரிடம் தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் காவல் ஆய்வாளர் மது விலக்கு கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் அனுமதி பெற்று காலை 9.30 மணியளவில் பெரம்பலூர் மாவட்ட எல்லையான திருமாந்துறை வெள்ளாற்று பாலம் அருகே வாகன தணிக்கை செய்தபோது அவ்வழியாக வந்த ஒரு லாரியிலிருந்து இரண்டு நபர்கள் ஒரு நபர் தனது கையில் அடர்பச்சை பையில் வெள்ளை நிற கோடு போட்ட பையில் இன்னொரு நபர் மஞ்சள் வெள்ளை கலந்த கட்டை பையும் எடுத்து கொண்டு வெள்ளாற்றன் கரையிலுள்ள மண்பாதை வழியாக செல்வதை பார்த்த காவல் ஆய்வாளர் மற்றும் நாங்கள் அவர்களை தடுத்து நிறுத்தி பிடித்து விசாரிக்க அதில் ஒருவர் தனது பெயர் ராஜ்குமார் என்றும்

சிவகாசியை சேர்ந்தவர் என்றும் மற்றொரு நபர் தனது பெயர் யாட்லாக் துர்க்காராவ் என்றும் தான் ஒரிசா மாநிலம் கிரிசோலாவை சேர்ந்தவர் என்று தெலுங்கு மொழியில் கூறினார். மேற்படி காவல் ஆய்வாளருக்கு தெலுங்கு மொழி தெரியும் என்பதால் அவர் கூறியதை அவர் புரிந்து கொண்டார். பின்பு அவ்விருவர்களையும் எங்களுடன் வந்த காவலர்களை வைத்து சோதனையிட அவர்கள் உடம்பில் எவ்வித தடயமும் இல்லை. பின்னர் அவர் வைத்திருந்த பையை சோதனையிட அதில் அடர்பச்சை வெள்ளை நிற கோடு போட்ட கையிலும், வெள்ளை மஞ்சள் கலந்த கட்டைபையிலும் 6 பொட்டலங்கள் இருந்தது. அவற்றை பிரித்து ஒரு சாக்கில் கொட்டி காவல் ஆய்வாளர் கொண்டு வந்த உபகரணங்கள் மூலம் அதில் சிறிதளவு எடுத்து நெருப்பு வைத்து பார்க்க அவற்றில் கஞ்சா வாடை அடித்தது. பின்பு நாங்கள் கொண்டு சென்ற எடை போடும் மிஷன் மூலம் எடை போட்டு பார்க்க அதில் மொத்தம் 12 கிலோ கஞ்சா இருந்தது. பின்பு காவல் ஆய்வாளர் மேற்படி கைதிகள் இருவருக்கும் சோதனை சம்மத கடிதம் மற்றும் கைது அறிவிப்பு கடிதம் கொடுத்து கைது செய்து அவர்களது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து பின்பு அவ்வழியாக வந்த திருமாந்துரையை சேர்ந்த இரண்டு நபர்கள் முன்னிலையில் இருவரிடமும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் பெற்று வழக்கு சொத்தை கைப்பற்றினார். பின்னர் அவ்இருவரையும் மாலை 16.00 மணிக்கு நிலையம் கொண்டு வந்து மேற்படி எதிரிகள் மீது பெரம்பலூர் மது விலக்கு அமலாக்க குற்ற எண்.28/2026 சட்டபிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act-ன்படி காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். அதற்கு நாங்கள் உதவியாக உடன் இருந்தோம். இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கு மாவட்ட கண்காணிப்பாளர் எழுத்து பூர்வமாக எந்த உத்தரவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.என்னை ஆய்வாளர் விசாரணையின் போது அந்த

அயல்பணி உத்தரவை கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் காவல் கண்காணிப்பாளர் எனக்கு எந்த அயல் பணி உத்தரவும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 07.03.2026-ம் தேதி விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் ஆய்வாளர் விசாரணையிலும் சொன்னேன் அவர் வாக்குமூலமாக பதிவு கொண்டார். நான் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஆவணங்களிலும் கையொப்பம் செய்யவில்லை. நான் இந்த வழக்கு சம்பந்தமாக எந்த ஆவணங்களையும் நான் தயார் செய்யவில்லை. நானோ என் உடன் வந்த சாட்சிகளோ எந்த ஆவணங்களிலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரிகள் வந்ததாக சொல்லப்படும் லாரி எண் லாரியின் பெயர் ஆகியவை எனது முதல் விசாரணை ஆய்வாளர் விசாரணை ஆகியவற்றில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். லாரியின் டிரைவர், கிளினர் ஆகியோர்களை சாட்சியாக போடவில்லை என்றால் சரிதான். அவர்கள் பெயர், விலாசம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எதிரிகளிடமிருந்து அவர்களின் பணமோ, கைபேசி மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை ஆய்வாளர் கைப்பற்றினாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சொல்லும் தேதியில் எந்த வித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகளிடமிருந்து எந்த ஒரு பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிகள் எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் இடத்தில் எனது பெயரோ எனது உடன் வந்த காவலகளின் பெயர்கள் இல்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட இடத்தில் இருந்திருந்தால் எங்களது பெயர் ஆவணங்களில் இருந்திருக்கும் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் நானோ எனது உடன் வந்த காவலர்களோ குறிப்பிட்டு என்ன வேலை செய்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை

என்றால் சரிதான். நான் உயர் அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,
புதுக்கோட்டை.